*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*22 10 2025 WEDNESDAY 7.15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. *பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.*
2. *லடாக் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக நியமிக்கப்பட்ட உள்துறை அமைச்சகத்தின் உயர்நிலை குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*
3. *புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*
4. *உகாண்டாவில் நேரிட்ட சாலை விபத்தில் 63 பேர் உயிரிழந்தனர்.*
5. *ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று பக்ரைனில் நடைபெறுகிறது.*

*>>>><<<<*

*பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.*

*தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், அம்மாநில துணை முதலமைச்சருமான திரு. Samrat Choudhary, Gayaji-யில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.*

*பீகாரின் வளர்ச்சிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி பாடுபடும் என்றும் திரு. Samrat Choudhary தெரிவித்தார்.*

*காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், அக்கட்சியின் பீகார் பொறுப்பாளருமான திரு. Krishna Allavaru, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசு தவறிவிட்டதாக குறைகூறினார்.*

*பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணிக் கட்கிகள் ஒருங்கிணைந்து பிரச்சாரத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.*

*பீகாரை நிலவும் பிரச்சினைகளை முன்நிறுத்தி, இந்த தேர்தலை எதிர்கொள்ளவுள்ளதாக திரு. Krishna Allavaru கூறினார்.*

*ராஜஸ்தான் முன்னாள் முதலமைச்சரும். காங்கிரஸ் கட்சியின் மூத்ததலைவர்களில் ஒருவருமான திரு. அஷோக் கெலாட் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தங்கள் கூட்டணியில் எவ்வித குழப்பமும் இல்லை என்றார்.*

*மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்த தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.*

*எதிர்க்கட்சி கூட்டணிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.*

*கூட்டணியையே ஒழுங்காக வழிநடத்த இயலாதவர்கள், சிறந்த நிர்வாகத்தை வழங்க முடியாது என்பதை மக்கள் உணர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.*

*தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான தொகுதி உடன்பாடு குறித்த காலத்திற்குள் முடிவடைந்ததையும் திரு. சிராக் பஸ்வான் சுட்டிக்காட்டினார்.*

*மத்திய அரசின் திட்டங்கள் பீகார் மாநிலத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் சென்றடைந்துள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் பாட்னாவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.*

*வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.*

*வாக்கு எண்ணிக்கை 14ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.*

*>>>><<<<*

*லடாக் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அமைக்கப்பட்ட உள்துறை அமைச்சகத்தின் உயர்நிலை குழுவின் முதலாவது கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*

*லடாக்கிற்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.*

*லடாக்கை சேர்ந்த முக்கிய தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.*

*லடாக்கில் கடந்த மாதம் நேரிட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து, இந்தக் குழு அமைக்கப்பட்டது.*

*>>>><<<<*

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இதன் காரணமாக, இதன் உற்பத்தி அதிகரித்து வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*2014ஆம் ஆண்டு 35 ஜிகாவாட் என்ற அளவிற்கே இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன் தற்போது 197 ஜிகாவட்டாக அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதனை, அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 500 ஜிகாவட்டாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>><<<<*

*வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கு, உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.*

*மிஸோரம், அஸ்ஸாம் மாநிலங்களின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துமாறு அவர் அறிவுறுத்தினார்.*

*குறிப்பாக, மிஸோரமில் பாமாயில் உற்பத்தியை அதிகரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

*>>>><<<<*

*நாக்பூர் ஆகாஷவாணியின் செயல்பாடுகள் குறித்து தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

*இதனைத்தொடர்ந்து, தகவல் ஒலிபரப்பு துறையின் இதர பிரிவு அதிகாரிகளுடன் அவர் விரிவான ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>><<<<*

*சென்னை ஐஐடி வளாகத்தில் நீடித்த எரிசக்திக்கான மையத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் Coal India நிறுவனம் இன்று கையெழுத்திட்டுள்ளது.*

*இந்த நிறுவனத்தின் தலைவர் திரு. பிரசாத் முன்னிலையில், சென்னை ஐஐடி இயக்குநர் திரு. காமகோடி மற்றும் கோல் இண்டியா நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் திரு. Achyut Ghatak ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.*

*நீடித்த எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்த மையம் ஏற்படுத்தப்படவுள்ளது.*

*>>>><<<<*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, இருசக்கர வாகனங்களின் விற்பனை அதிகரித்துள்ளது.*

*தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் இருசக்கர வாகனங்களை வாங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - ராஜசேகரபாரதி 39 செகண்ட்ஸ்)*

*>>>><<<<*

*தில்லியில் தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தின் போது, காற்றின் மாசு கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் குறைவாக இருந்தாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்றுமாசை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*இப்பிரச்சினை குறித்து பஞ்சாப் முதலமைச்சருடன் நாளை விவாதிக்கவுள்ளதாகவும் திருமதி. ரேகா குப்தா கூறினார்.*

*>>>><<<<*

*மேற்குவங்கத்தைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லை என்று கூறி இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதற்கு உரிய விளக்கம் அளிக்கப்படாவிட்டால், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*>>>><<<<*

*மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, நக்ஸலைட்டு பிரச்சினை குறைந்துள்ள சத்திஷ்கட் மாநில முதலமைச்சர் திரு. Vishnu Deo Sai கூறியுள்ளார்.*

*இன்று ராய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நக்ஸலட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதே இதற்கு காரணம் என்றார்.*

*>>>><<<<*

*உகாண்டாவில் நேரிட்ட சாலை விபத்தில் 63 பேர் உயிரிழந்தனர்.*

*கம்பாலா - Gulu நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த லாரியை கடக்க முயன்ற இரண்டு பேருந்துகள் அப்பகுதியில் சென்று கொண்டிருந்த கார்கள் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*>>>><<<<*

*அரபிக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது.*

*இது, கோவா மற்றும் லட்சத்தீவுக்கு இடையே நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இதேபோல் வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கும் என்றும் சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>><<<<*

*ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று பக்ரைனில் நடைபெறுகிறது.*

*இந்தியாவின் சார்பில் 222 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

*இன்று நடைபெற்ற ஆடவர் பிரிவு கபடி போட்டியில் இந்தியா 84-40 என்ற புள்ளிக்கணக்கில் பஹ்ரைனை வென்றது.*

*>>>><<<<*

*ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Jagsher Singh Khangurra காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*
*சீனாவின் Chengdu-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் 17 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், சீனாவின் Yufeng-ஐ வென்றார்.*

*>>>><<<<*

*எகிப்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ishita Negi பட்டம் வென்றார்.*

*>>>>END<<<<*